**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *277*** **நாள் : *17.09.2022***

**பெருநகர சென்னை மாநகராட்சி வாகன நிறுத்த இடங்களில் வாகனங்களை நிறுத்தாமல் விதிமீறும் வாகன உரிமையாளர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காவல் துறையின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அபராதம் விதிக்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த சாலையோரப் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வாகனங்கள் நிறுத்துவதற்காக *80* இடங்களில் சுமார் *7000* வாகனங்கள் நிறுத்தும் அளவிற்கு இடங்கள் கண்டறியப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகன நிறுத்த இடங்கள் குறித்த விவரங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் *https://chennaicorporation.gov.in/gcc/pdf/ECS.pdf* என்ற இணையதள இணைப்பின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இந்த வாகன நிறுத்த இடங்களில் ஒரு மணி நேரத்திற்கு நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ.*20/-* எனவும், இரண்டு சக்கர வாகனங்களுக்கு ரூ.*5/-* எனவும், வணிக வளாகப் பகுதியான தியாகராய நகர், பாண்டி பஜார் வாகன நிறுத்தத்தில் நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ.*60/-* எனவும், இரண்டு சக்கர வாகனங்களுக்கு ரூ.*15/-* எனவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் வாகன நிறுத்த இடங்களில் ஒருசிலர் வாகனங்களை நிறுத்திவிட்டு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தவில்லை எனவும், ஒருசில இடங்களில் வாகன நிறுத்தம் இல்லாத இடங்களில் வாகனங்களை நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் புகார்கள் பெறப்பட்டுள்ளன.

எனவே, வாகன நிறுத்த இடங்களில் ஏற்படும் விதிமீறல்களை கட்டுப்படுத்தி போக்குவரத்து இடையூறுகளை குறைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காவல்துறையின் சார்பில் அதிகாரிகள் கொண்ட குழுவினர் ரோந்து சென்று நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், கோடம்பாக்கம் மண்டலம், தியாகராய நகரில் உள்ள மாநகராட்சி வாகன நிறுத்த இடங்களில் துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.விஷ்ணு மஹாஜன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தியாகராய நகர் காவல் உதவி ஆணையாளர் திரு.பாரதிராஜன் ஆகியோர் தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முறையான கட்டணம் செலுத்தாத வாகனங்கள் பூட்டப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், வாகன நிறுத்தம் உள்ள பகுதிகளில் வாகனங்களை நிறுத்தாமல் போக்குவரத்திற்கு இடையூறாக வாகனத்தை நிறுத்தியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் வாகன நிறுத்த இடங்களில் வாகனங்களை நிறுத்தும்பொழுது அதற்குரிய முறையான கட்டணத்தை செலுத்த வேண்டும். வாகனங்களை போக்குவரத்திற்கு இடையூறாக வாகன நிறுத்தம் அல்லாத பகுதிகளில் நிறுத்தக் கூடாது. மீறும் நபர்களின் மீது மாநகராட்சி மற்றும் காவல் துறையின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**செய்தி வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**